## நவக்கிரக வேண்டுகோள்

உலக உயிர்களின் கரும வினை அதிர்வுகளை கிரகித்து தம்முடைய சுழற்சி காலங்களில், குறிப்பிட்ட கோணங்களில் வரும்போது அந்தந்த கர்மவினைகள் செய்த உயிர்களை அதே அதிர்வுகள் தாக்கி உடலையும், மனதையும் வழிநடத்துகிறது. இதனால் நற்பலன்களும், தீயபலன்களும், இன்பமும், துன்பமும், வளமையும், வறுமையும் அவரவர் வாழ்க்கையில் ஏற்படுகின்றன.

வாழ்வில் துயரங்களும், துன்பங்களும், நோய்களும், தம்மை வதைக்கின்ற காலங்களில், ஆண்டவனை வழிபடுவதுடன் அந்த கிரகங்களின் அதிர்வுகளை தணித்துக் கொள்ள அந்தந்த கிரக நாயகர்களையும் வழிபட்டு துன்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

இவ்வாறு நன்மை அடையும் பொருட்டு, அன்னையே நவக்கிரகங்களை போற்றி வழிபடும் மந்திரங்களை அருளியுள்ளார். அந்தந்த கிரகங்களுக்குரிய மந்திரங்கள் அந்தந்த கிரகங்களுக்குரிய காயத்ரி (பீஜ) மந்திரம் போல் ஆற்றல் மிக்கதாக உள்ளது. எனவே மனசுத்தியுடன் முறையாக கிரகங்களை வேண்டி சரியான உச்சரிப்புடன் வழிபடுவது முழுப்பலன் அளிக்கும்.

இவ்வழிபாடுகளில், அந்தந்த கிரகங்களுக்குரிய நாள், குணங்கள், தானியங்கள், கற்கள் அனைத்தும் கூறப்பட்டுள்ளன. இதில் எந்த கிரகத்தின் பாதிப்பு உள்ளதோ, அவர்கள் அந்த கிரகத்திற்குரிய நாளில், அந்த கிரகத்திற்குரிய தானியத்தில் பிரசாதம் செய்து படைத்து, மற்ற எல்லா கிரக வழிபாடுகளுடன் குறிப்பிட்ட கிரகத்தின் வழிபாடு மட்டும் 9 முறை தனியாக படித்து வழிபாடு செய்து முடித்தல் வேண்டும்.

| **கிரகங்கள்** | **நாள்** | **பிரசாதம்** | **கல்** |
|---|---|---|---|
| சூரியன் | ஞாயிறு | கோதுமை இனிப்பு பண்டம் | மாணிக்கம் |
| சந்திரன் | திங்கள் | பால் பொங்கல் | முத்து |
| அங்காரகன் | செவ்வாய் | துவரை சுண்டல் | பவழம் |
| புதன் | புதன் | பச்சைப்பயிறு சுண்டல் | மரகதம் |
| குரு | வியாழன் | கடலை சுண்டல் | புஷ்பராகம் |
| சுக்கிரன் | வெள்ளி | மொச்சை சுண்டல் | வைரம் |
| சனீஸ்வரன் | சனி | எள்மாவோடு வெல்லம் | நீலக்கல் |
| ராகு | சனிக்கிழமை ராகுகாலம் | உளுந்து இனிப்பு சுண்டல்(வெல்லம், தேங்காய்) | கோமேதகம் |
| கேது | செவ்வாய் கிழமை ராகுகாலம் | கொள்ளு சுண்டல் | வைடூரியம் |

### போற்றிகள்

நவகோள் நாயகர்களே போற்றி
நன்மை பல தருபவர்களே போற்றி
நாளும் உயிரை வழி நடத்துவோரே போற்றி
நாடிவரும் வினைகளை தடுத்தாள்வீர் போற்றி
அனுதினமும் அகிலத்தை இயக்குவோரே போற்றி
அளவில்லா ஆற்றல் சக்தி கொண்டோரே போற்றி
உம் திருத்தாள் வணங்கி நிற்கின்றோம்
உரிய வழியில் யாவும் நடத்தி வைத்திட வேண்டும்

உம் அருளால் எடுத்திடும் திருப்பணிகள் யாவும்
சிறப்புற நடத்தி, சீராக வளர்த்து,
நாளும் தழைத்து, மேலும் மேலும்
ஓங்கச் செய்திட உம் அருளை துதித்து நிற்கின்றோம்

**ஞாயிறு**
**தானியம் – கோதுமை**



| | |
|---|---|
| கதிரவனே கண்ணொளி தருவோனே | போற்றி |
| ஆன்மகாரகனே அகிலம் புரப்போனே | போற்றி |
| அனைத்து கோள்களுக்கும் முதன்மையானவனே | போற்றி |
| அல்லல் தீர்த்து அனுதினமும் காப்பாய் | போற்றி |
| புகழ்ச்சியும் உயர்வும் தருவாய் | போற்றி |
| தோற்றமும் பொலிவும் திகழ்விப்பாய் | போற்றி |
| ஆற்றலும் அறிவும் அளிப்பாய் | போற்றி |
| ஆதிக்க வலிமை ஈவாய் | போற்றி |
| அனைத்தையும் அடக்கும் ஆற்றல் கொண்டவனே | போற்றி |

கதிரவனே, பகலவனே, கிரகநாயகனே நின் திருவருளை வணங்கி வேண்டுகின்றோம். நாளும் யாவும் செழித்தோங்க, புரிந்திடும் பணிகள் வெற்றியோடு திகழ, அருள் புரிந்திட வேண்டும், தலைவா போற்றி ! போற்றி ! !

**சந்திரன்**
**தானியம் – நெல்**



| | |
|---|---|
| திங்களோனே தண்ணழகோனே | போற்றி |
| திகட்டா தனி இன்பம் தருவோனே | போற்றி |
| உயிர்க்கோளாய் விளங்குவாய் | போற்றி |
| உள்ஞானம் பெருக்கும் வழியே | போற்றி |
| அமுததாரை தோற்றுவிப்பாய் | போற்றி |
| அறிவின் சுடர் ஓங்குவிப்பாய் | போற்றி |
| அழகும் அன்பும் ஒருங்கானாய் | போற்றி |
| நிதி நலம் பெருக்கும் வலிமை உடையாய் | போற்றி |
| நீங்கா பேரின்பம் நல்குவாய் | போற்றி |
| நிலவென பெயர் படைத்த சந்திரனே | போற்றி |
| நித்தம் நின்னை துதிப்போம் | போற்றி |

தூய்மையானவனே, வெண்திங்களோனே, மதியே, உன் திருவருளை வேண்டி பணிகின்றோம். அண்டினோர் தம்மை அனுதினமும் காத்து, போற்றரும் கலைகளும், குறையா வளமும் ஈந்து நாளும் காத்திடுவாய் போற்றி ! போற்றி !

**செவ்வாய்**

**தானியம் – துவரை**



| | |
|---|---|
| சேயோனே செவ்வாயே | போற்றி |
| செம்மை நிறம் கொண்டோனே | போற்றி |
| பவழமணி தனக்குரியோனே | போற்றி |
| அழியா இளமை உடையோனே | போற்றி |
| வீரத்தின் தலைமையாய் இருப்போனே | போற்றி |
| வேண்டிடும் அனைத்தும் ஈவோனே | போற்றி |
| மண்ணிற்கு ஆதிக்கம் உடையோனே | போற்றி |
| மங்கா வலிமை கொண்டோனே | போற்றி |
| மருவா தரும நெறி மகிழ்வோனே | போற்றி |
| மங்கல வாழ்விற்கு வழிவகுப்பாய் | போற்றி |

சேயோனே, உம்திருத்தாள் பணிந்து நிற்கின்றோம். தளபதியாய், தன்னிகரற்றவனாய் திகழும் உம்மைப் பணிகின்றோம். நாளும், மங்கா வளமும், உடல் வலிமையும், இளமையும் ஈந்து, யாவரையும் காத்திட வேண்டித் துதிக்கின்றோம்.

**புதன்**

**தானியம் – பச்சைப்பயிறு**



| | |
|---|---|
| புதனே, புண்ணியனே | போற்றி |
| புத்தியும், பொருளும் பெருக்குவாய் | போற்றி |
| புண்ணியனாய் விளங்குவாய் | போற்றி |
| மரகதம் தனக்கென கொண்டாய் | போற்றி |
| பசுமை ஒளியில் நிறைவாய் | போற்றி |
| பற்றும் பாசமும் பெருக்குவாய் | போற்றி |
| வித்தைகளை விளக்கித் தருவாய் | போற்றி |
| விவேகத்திற்கு இருப்பிடம் ஆனாய் | போற்றி |
| கல்வியும், ஞானமும் ஈவாய் | போற்றி |
| பயிறு தன்னில் மகிழ்ந்தருள்வாய் | போற்றி |

நாளும் மண்ணில் நலமான வாழ்வும், நல்லறிவும் தந்து, நாடி வருவோரைக் காத்திடவேண்டிப் பணிகின்றோம் ஐயனே.

**குரு**
**தானியம் – கடலை**



| | |
|---|---|
| வித்தைக் கடலே குருவே | போற்றி |
| விவேக சாகரமே மோனமே | போற்றி |
| மௌன நிலை காட்டி அருளியவா | போற்றி |
| மாறா இன்பவழி தருவாய் | போற்றி |
| புரியும் பணிக்கு பலன் ஈவாய் | போற்றி |
| புஷ்பராகம் உனக்கென கொண்டாய் | போற்றி |
| கடலை வகையில் கருத்துடையாய் | போற்றி |
| கலையா சன்மார்க்க நிலை அருள்வாய் | போற்றி |
| ஞானமும், பக்தியும் தருவாய் | போற்றி |
| நல்லறிவு தந்திடும் தலைமையே | போற்றி |

பொன்னனே, உம் அருளால் அகில முற்றும் ஞானம் செழிக்கவும், நல்லறிவு வளரவும், தீமைகளை அழித்து அன்பர்களைக் காக்கவும் பணிகின்றோம்.

**சுக்கிரன்**

**தானியம் – மொச்சை**



| | |
|---|---|
| அசுர குருவே, அழகே | போற்றி |
| மாயையில் வித்தை புரிவாய் | போற்றி |
| இல்லற இன்பம் தருவாய் | போற்றி |
| இனிய சுகவாழ்வு உன் அருளால் | போற்றி |
| அண்டினோர்க்கு வளம் புரிவாய் | போற்றி |
| கற்பகத்தருவே, காமதேனுவே | போற்றி |
| கலைகளின் அழகே சுக்கிரனே | போற்றி |
| வைரத்தில் ஒளியாய் உறைவாய் | போற்றி |
| மகிழ்வும், மாறா வலிமையும் தருவாய் | போற்றி |

அசுர குருவே, சுக்கிரனே, அழகனே, நின் திருவருள் அல்லும் பகலும், அழியா இன்பமும், அளவிலா வளமும் ஈந்திடும் என்றே உம் திருவருள் நாடி திருவடி தொழுகின்றோம்.

**சனி**

**தானியம் – எள்**



| | |
|---|---|
| காரிருள் நிறத்தோனே கர்மனே | போற்றி |
| கலங்கா நெஞ்சம் உடையவனே | போற்றி |
| பொறுமையே உருவாய் உள்ளவனே | போற்றி |
| போற்றல், தூற்றல் கொள்ளாதவனே | போற்றி |
| நடுநிலை தவறா குணம் உடையவனே | போற்றி |
| நல்லோர்க்கு நாளும் அன்பனே | போற்றி |
| நீலக்கல்லில் நீயும் நிறைந்திருப்பாய் | போற்றி |
| நீங்கிடா வினைகளையும் விலக்குவாய் | போற்றி |
| எள்ளில் ஏக்கம் கொண்டவனே | போற்றி |
| எந்நாளும் பணிவோரைக் காப்பவனே | போற்றி |

சனி என்ற பெயர் படைத்தவனே, நடுநிலை தவறா குணம் உடையவனே, பொறுமையே தன்மை என நிற்பவனே, உம் திருத்தாளைப் பணிகின்றோம். எம் வினைகளை அகற்றி, குறைகளை நீக்கி, துயரங்களைப் போக்கி, செழுமைகளைத் தந்தே காத்திட வேண்டும்.

**ராகு – கேது**
**தானியம் – உளுந்து, கொள்ளு**




| | |
|---|---|
| ராகு, கேதுக்களே | போற்றி, போற்றி |
| ஞானமும், மோட்சமும் தருவோரே | போற்றி |
| உளுந்தும், கொள்ளும் கொள்வோரே | போற்றி |
| விருப்பும், வெறுப்பும் இல்லாதவரே | போற்றி |
| உலகின்பம் மாற்றி அமைப்போரே | போற்றி |
| உன்னத நிலைக்கு வழி வகுப்பீர் | போற்றி |
| கோமேதகம் தன்னைக் கொண்டாய் | போற்றி |
| வைடூரிய மணியில் உறைவாய் | போற்றி |
| ஞானசாகரக் காவலரே | போற்றி |
| மோனக் கடலின் முத்தே | போற்றி |

ராகு கேதுக்களின் திருவருளால் பாபங்களும் பிணிகளும் விலகி, தவறுகளும், தண்டனைகளும் நீங்கி, நாளும் வையத்தில் இன்புற்றிருக்க வேண்டிப் பணிகின்றோம்.